[2023 அக்டோபர் 9

முற்பகல் 10–05

(ஈ) திரு. எம்.எஸ். சுவாமிநாதன், வேளாண் அறிவியலாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *‘பசிப்பிணி ஒழிப்பு–உணவுப் பாதுகாப்பு’ என்ற இரு குறிக்கோள்களுக்காக அரும்பணியாற்றிய வேளாண் அறிவியலாளர் திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் 28–9–2023 அன்று, தமது 98–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

நீடித்த, நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ எனப் போற்றப்படும் திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், பல்வேறு உயர் பொறுப்புகளிலும், 1989–1991 மற்றும் 1996–2000 ஆகிய ஆண்டுகளில் மாநிலத் திட்டக் குழுவில் பதவி வகித்ததோடு, 2007–2013 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள். சமூகத் தலைமைக்கான இராமன் மகசேசே, பத்மஶ்ரீ, பத்ம பூசன், பத்ம விபூசன் உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், வேளாண் அறிவியல் துறை சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)